# யாழ்ப்பாணத்து இசைவேளாளர்

அவரின் சேவகம் பற்றிய ஆய்வு



த. சண்முகசுந்தரம்

# யாழ்ப்பாணத்து இசைவேளாளர்

## அவரின் சேவகம் பற்றிய ஆய்வு

*Srikanthaluxumy. A*
*11/21, Inuvil West*
*Chunnakam*

த. சண்முகசுந்தரம்

Donated by
The Family of
Prof. A. SATHASIVAM
Dept. of Tamil
University of Peradeniya

வெளியீடு :
அருள் வெளியீட்டகம்
மாவை கந்தசாமி கோவிலடி
தெல்லிப்பழை
இலங்கை
1-10-82

விலை ரூபா : 6-00

உரிமை ஆசிரியருக்கே

# முன்னுரை

திரு. த. சண்முகசுந்தரம், பி. ஏ. (இலங்கை) கல்வி டிப்ளோமா (இலங்கை) அவர்கள் எழுதிய "யாழ்ப்பாணத்து இசைவேளாளர்" கட்டுரையை வாசித்துள்ளேன். அக் கட்டுரையில் முக்கியமாக நாதசுரம், தவில் ஆகிய இசைக் கலைகளின் பழைய புதிய நிலைகள் பற்றியும் அவைகளின் பெருமைபற்றியும் மிகவும் விரிவாகக் கூறியுள்ளார். இதை வாசிக்கும் பொழுது உள்ளத்தில் மகிழ்ச்சிக்குரிய உணர்ச்சி மேலோங்குகின்றது இக்கட்டுரை, வாசிப்பதை இடையில் நிறுத்தாமல் தொடர்ந்து வாசித்து முடிக்கவேண்டுமென்ற ஆவல் எழக்கூடிய வகையில் அமைந்திருக்கிறது.

கட்டுரை ஆசிரியர் எனது நீண்டகால நண்பன், ஆங்கிலத்திலும் தமிழிலும் நிபுணத்துவம் பெற்றவர். ஒரு காலத்தில் பத்திரிகை எழுத்தாளராகவும் திகழ்ந்தவர். தமிழில் பல புத்தகங்கள் எழுதி வெளியிட்டுள்ளார். இக் கலைகளைப்பற்றி எழுதுவதற்கு எவ்வளவோ நூல் ஆராய்ச்சியையும், பல கலைஞர்களின் உரையாடல்களையும், அவர்களின் அனுபவங்களையும் பெற்றுத் தொகுத்துச் சுவையாக எழுதுவதென்பது இலகுவான காரியமல்லவென்று அனைவரும் ஒத்துக் கொள்வர்.

கட்டுரையில், யாழ்ப்பாணத்தில் நாதசுரம், தவில் ஆகிய கலைகளின் நிலையையும் அவைகளைக் கையாண்டு மேதாவியாக விளங்கிய கலைஞர்களுடைய பெயர்களையும் குறிப்பிடப்பட்டிருப்பது தற்கால இர

சிகர்களுக்கு ஒரு ஞாபகமூட்டும் அலுவலாகும். அத்துடன் நில்லாது தற்கால கலைஞர்களின் திறமை பற்றியும், செறிவு பற்றியும் தெளிவாகவும் எளிதில் விளங்கக் கூடிய வகையிலும் எழுதியிருப்பது பெரிதும் போற்றத்தக்கது. மேலும் இவ்விரு வாத்தியக் கலா இரசிகர்களுக்குத் தெரியவேண்டிய எத்தனையோ விஷயங்களை வெளிக் கொண்டுவந்திருக்கிறார். இரசிகர்களுக்கு இந்நூல் ஓர் அரிய பொக்கிஷமாகும்.

ஆரம்பத்தில் நாதசுர வாத்தியம் கோவில்களில் இறைவனை நித்திய பூசைகளிலும், விழாக் காலங்களிலும் சேவிக்கும் ஒரு வாத்தியமாகக் கருதப்பட்டது: என்பதை ஆசிரியர் சுட்டிக்காட்டியுள்ளார்; ஆனால் அது மங்கல வாத்தியமானபடியால் இப்பொழுது கல்யாணக் காலங்களிலும் வேறு விசேட மகிழ்ச்சிக்குரிய காலங்களிலும் உபயோகப்பட்டு வருகின்றதென்றும் கூறியுள்ளார். கோவில்களில் ஆறுகாலப் பூசைகள் நடைபெறும்பொழுது அவ்வக் காலங்களில் நாதசுரத்தில் வாசிக்கவேண்டிய இராகங்கள் இன்னதின்னதென்றும் எடுத்துரைத்திருக்கின்றார்.

இந்நூல் அனைவருக்கும், பிரதானமாக இசைப் பிரியர்களுக்கு ஓர் அறிவுக் களஞ்சியமாக அமைந்திருக்கிறது. அனைவரும் இந்நூலை வாசித்துப் பயன் பெறவேண்டுமென்று இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

சாந்தி,
கொல்லங்கலட்டி,
மாவிட்டபுரம்.
இலங்கை

வ. சரவணமுத்து
1-10-82

Srikanthaluxumy. A
11/21, Inuvil West
Chunnakam

# பதிப்புரை

யாழ்ப்பாணத் இசைவேளாளரின் நாதசுர தவில் இசைப்பணியை ஆய்வுசெய்ய இங்கு முயன்றுள்ளேன். என் கட்டுரையைப் பார்வையிட்ட பெரியார் இருவர். இது அச்சேற வேண்டும் எனப் பெரிதும் விரும்பினர். ஒருவர் சென்னை இராசதானிக் கல்லூரி அதிபரும் அதன் பௌதிக இயற் பேராசிரியருமான கலாநிதி பொன். திருஞானசம்பந்தம். மற்றவர் என் நீண்டகால நண்பர் கலாநிதி கவிஞர் நாவற்குழியூர் க. செ. நடராசா. இவர் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் முன்னை நாள் பணிப்பாளர். இப்போது கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் இலக்கியத் துறைத் தலைவராக இருந்து பணிபுரிந்து வருகின்றார். கலாநிதி நடராசாவின் முயற்சியினுல் இதே கட்டுரை **26-4-81** இல் அச்சங்க மண்டபத்தில் வாசிக்கப்பட்டது; வாசிப்பின் பின் கலந்துரையாடல் நடைபெற்றது. இதில் பலர் கலந்துகொண்டனர். அவரில் குறிப்பிடப்பட வேண்டியவர் சங்கத் தலைவர் திரு. பொ. சங்கரப்பிள்ளை. இவர் பொருளியல் நிபுணர். மற்றவர் பாவலர் துரையப்பாபிள்ளையின் இளைய மகனும் இளைப்பாறிய நிர்வாக உத்தியோகத்தருமாகிய திரு. தர்மராசா. இவர்களுக்கும் கொழும்புத் தமிழ்ச்சங்கத்தின் ஏனைய அலுவலர்க்கும் என் உளப்பூர்வமான நன்றி.

எல்லாவற்றிற்கும் மேலாக இந்தநூல் நல்ல முறையில் வெளிவர வேண்டும் என்பதற்காக எனக்கு ஊக்கமும் ஆக்கமும் தந்தவர் சமாதான நீதவான் வ. சரவணமுத்து. இந்நூலை வாசித்துப் பார்த்து நல்லதொரு முன்னுரையையும் இவர் வழங்கியுள்ளார். சைவப் பண்பாட்டின் நிலைக்களனுக விளங்குகின்ற பெரும் குடும்பத்தைச் சேந்தவர். இவர் இங்கு குறிப்பிடப் பெற்றுள்ள திரு. சங்கரப்பிள்ளை விசுவநாதரின் ஒன்றுவிட்ட தம்பியார். தலைசிறந்த சமூகத்

தொண்டர்; சமயத் தொண்டர்; இலங்கை மலேசியக் கழகத்தின் தலைவர்; தெல்லிப்பழை ஐக்கிய வைத்தியசாலைச் சங்கத்தின் தலைவர்; திருக்கேதீச்சரத் திருப்பணிச்சபை உறுப்பினர். மாவை முருகனின் அடியார்; ஆதீனப் பாரம்பரியம் தெரிந்தவர். இவருடன் சேர்ந்து இவரின் வழிகாட்டலில் உழைக்கின்ற பெருவாய்ப்பு எனக்குத் தெல்லிப்பழை ஐக்கிய வைத்தியசாலையில் ஏறக்குறைய பத்தாண்டு காலம் கிடைத்தது. இவருக்கு என் உளப்பூர்வமான நன்றியைத் தெரிவிக்கின்றேன்; இதில் பூரிப்படைகின்றேன்.

ஈழத்து இசைவளர்ச்சிபற்றி அறிய முதலியாப்பிள்ளை போன்றோரின் வாழ்க்கை வரலாறு பெரும் உதவியாக இருக்கும். ஆகவே அவரின் வாழ்க்கை பற்றிய குறிப்பையும் இங்கு சேர்ப்பது மிகவும் பொருத்தம்.

முகப்புப் படத்தை அழகுறச் செய்துதந்த நண்பன் கலாகேசரி ஆ. தம்பித்துரைக்கு என் அன்பு கலந்த நன்றி.

இந்த ஆய்வு இசையாளர் குடும்ப வரலாறு அன்று; அல்லது இசையாளர் வசிக்கும் கிராமத்தின் வரலாறும் அன்று. இது பொது நோக்கு. விரும்புவோர் குடும்ப வரலாற்றையோ, கிராம வரலாற்றையோ விரிவாக எழுதலாம். இசை வேளாளரின் நாதசுர, தவில் இசைப் பணியை மட்டும் இங்கு ஒருவாறு ஆராய்ந்துள்ளேன். இவர்களின் ஏனைய கலைப் பணியையும் விரும்புவோர் ஆராயலாம். அதே போன்று ஏனைய மாவட்டங்களில் வாழும் இசை வேளாளரின் பணியையும் ஆராயலாம். அதற்கு வேண்டிய உதவியைச் செய்ய நான் பின்நிற்கமாட்டேன்; அதனை வரவேற்பேன்.

எனக்கு எல்லா வகையிலும் உதவி செய்த கட்டுவனூர் பண்டிதர் செ. நடராசாவிற்கு என் அன்பு கலந்த நன்றி. அதே போன்று குகன் அச்சகத்து அதிபர் சி. நவரத்தினத்திற்கும் சிறப்பான நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

மாவை முருகன் அடியார்

## முதலியாப்பிள்ளை

கல்வியின் நோக்கம் கடவுளை அடைதல்; கலைக ளின் நோக்கம் கடவுளைச் சேவித்தல். இவை தமி ழன் கண்ட உயர்ந்த கோட்பாடுகள். இக் கோட் பாடுகளுக்கமைய சைவக் கோவில்களில் சுவடிச்சாலை யும் கலைஞர் குழாம்களும் அமைந்திருந்தன. தமிழ் நாட்டைப் போன்ற பெரிய கோயில்களும் ஆதீனங் களும் ஈழவழநாட்டில் இல்லை. இருந்தும் உயர்ந்த கோட்பாடுகள் நன்கு பேணிக் காப்பாற்றப்பட்டு வந்துள்ளன. ஒவ்வொரு ஆதீனத்திலும் சைவக் கலை ஞர்களைக் கௌரவிக்கும் பெரும் மரபு இருந்து வந் துள்ளது. ஆதீனங்களைத் தவிர ஆதீனங்களுடன் நெருங்கிய தொடர்புடைய சிவநெறி வள்ளல்கள் பலரும் இருந்திருக்கின்றனர்; இருந்து கலைஞரை ஊக் குவித்துள்ளனர். இது பற்றி விரிவான ஆராய்ச்சி தேவை. மாவிட்டபுரம் முருகன் ஆலயத்தைப் பொறுத்தவரையில் ஆதீன கருத்தர்களும் உபயகா ரர்கள் பலரும் இருந்து கலைஞர்களுக்குக் கைகொடுத் துதவியுள்ளனர். முக்கியமான இவர்களில் ஒருவர் முருகன் அடியார் ச. விசுவநாதன். இவரைப் பொது மக்கள் அன்புடன் முதலியாப்பிள்ளையென அழைப்பர். முருகனின் பணிக்கெனத் தம்மையே அர்ப்பணித்த இவர் 1875ம் ஆண்டிலே பிறந்தார். தந்தையாரின் பெயர் சங்கரப்பிள்ளை. மாவை முருகனுக்கு கொடி மரம் எழுப்பியபடியால் இவரை எல்லோரும் கொடி மரம் சங்கரப்பிள்ளை என்பர். இளம் விசுவநாதர், பெரும் புலவர் சுன்னுகம் குமாரசுவாமியிடம் முறை யாகப் பாடம் கேட்டவர். தமிழ் நூல்களையும், சைவமதத் திருநூல்களையும் நன்கு கற்றுத் தேறி ஞர் தன் உறவினராகிய திரு. ஐயாக்குட்டி அவர் களின் மகள் விசாலாட்சியைத் திருமணம் செய்தார். மகப்பேறு இல்லை. '' இதுவும் முருகன் சோதனை '' என ஆறுதலடைந்து விசுவநாதர் மாவை முருகனுக்

குத் தொண்டு செய்வதையே தன்முழு நேரப் பணியாக ஏற்றுக்கொண்டார். அன்பும், பண்பும், அடக்கமும் நிரம்பிய இவர் முருகனைச் சேவிக்கும் கலைஞர்களுக்கும் அவ்வப்போது வேண்டிய உதவிகளைக் குறிப்பு அறிந்து செய்து வந்தார். கோயிலில், கலைஞர்களுக்கு சன்மானம், வேட்டி, சால்வை போன்றவற்றை ஆதீனகருத்தர் மூலம் வழங்குவார். வழங்குவதில் பேரின்பம் காண்பவர் இவர். அது மட்டன்றி வருடப்பிறப்பு, தைப்பொங்கல், தீபாவளி போன்ற திருநாள்களில் எல்லாம் இவர் வீடு ''அறக்கோயிலாக'' ''கொடைக்கோயிலாக'' மாறிவிடும். கலைஞருக்கு செம்பொற்காசு, புத்தாடை என்பவற்றை அகமகிழ்ந்து வழங்குவார். கலைஞர் இன்புற்றிருப்பதைக் கண்டு தாமும் இன்புறுவார். சன்மானம் பெற்ற கலைஞர் அவரை வணங்குவது வழக்கம். ''அப்பனே! என்னை வணங்காதீர் திருமுருகனை வணங்கி அவனைச் சேவியுங்கள்'', என்று பயபத்தியாக விடையளிப்பர். ஆடம்பர வாழ்வை, புகழை இவர் ஒருபோதும் விரும்பியது இல்லை. திருநீறு துலங்கும் நெற்றி; இடுப்பிலே நான்குமுழ வேட்டி; தோளிலே ஒரு துண்டு; வெறும் மேல்; கையிலே ஒரு கெவிடு; வெறுங்கால் நடை; செருப்பணிவது மிகவும் குறைவு; முகத்திலே பெரும் பொலிவு; இவைதான் முதலியாப்பிள்ளையின் புறத்தோற்றம். அகத்தோற்றமும் தூய்மையானது; புறத்தோற்றமும் பொலிவானது.

இவரையும், இவர்போன்ற அறவள்ளல்களையும் பற்றிய பரந்த ஆய்வு தேவை. யாழ்ப்பாணத்து அரசு இல்லாத காலத்தில் இவர்போன்ற வள்ளல்களே தமிழிசைக் கலைஞர்களைப் போற்றி அவர்களுக்கு, அரசன் செய்யவேண்டிய பணிகளை யாழ்ப்பாண மாவட்டத்தில் செய்தனர். கலைஞரைக் கௌரவிக்கின்ற பணியை இப்படியான பெரியோர் பலரும் ஏற்று நடந்தனர். இதனால் யாழ்ப்பாணத்து கலைப் பாரம்பரியம் பேணிக் காக்கப்பட்டது. இல்லா விட்டால் ஐரோப்பிய மோகம் எல்லாவற்றையும் கொளவி விழுங்கியிருக்கும்.

" முருகா துணை ! குருவே சரணம் ", என்று உச்சரித்துவந்த முதலியாப்பிள்ளை பெருமகன் 1950 ஆம் ஆண்டிலே மறைந்தார்.

த. சண்முகசுந்தரம்

---

# " Yalpanathu Isai Velalar "

The Nathaiswaram Tavil Musicians of Jaffna A study of their Contribution to Music.

T. Sanmugasuntharam, B. A. (cey.)
Dip - in - Ed. (Cey.)

*Publishers*
Arul Velliettu Akam,
Mavai Kanthasamy Kovilady,
Tellippalai,
Sri Lanka.

*Printers :*
Kugan Press,
Tellippalai.
1-10-82

PRICE Rs. 6-00

*All Rights Reserved*

# யாழ்ப்பாணத்து இசை வேளாளர்

## நாதசுரம், தவில் சேவகம் பற்றிய ஆய்வு

பழைய மரபை மறக்காத பண்புடையவர் யாழ்ப்பாணத்து இசைவேளாளர். அதே நேரத்தில் புதுமையை ஏற்கவும் இவர் தயார். இதனால் ஈழத்து இசை உலகில் இன்று இவர் முதன்மை பெற்றுள்ளனர். யாழ்ப்பாணத்து இசை வேளாளர் பலரும் தமிழ் கூறும் நல்லுலகமான மலேசியா, சிங்கப்பூர் போன்ற இடங்களுக்கும் சென்று தம் இசைப்புலமை மூலம் புகழ் தேடியுள்ளனர். இன்னும் சிலர் மேலைத் தேயங்களுக்கும் சென்று இசை நிகழ்ச்சியை நடத்தித் தம் பெருமையை நிலைநாட்டியுள்ளனர். ஏனைய கலைஞருக்குக் கிடைக்காத புகழும் பெயரும் இக் கலைஞருக்குக் கிடைத்துள்ளன. மரபுவழிநின்று தம் குலவித்தையை இவர் பேணிக்காக்கின்றனர்; இருந்தும் இக்குலத்தவரின் வரலாறும் இவரின் இசைப்பணியும் செம்மையாக ஆராயப்படவில்லை. இந்த இசை வேளாளர் நாதசுரம், தவில் ஆகிய கலையுடன் நின்றுவிடவில்லை. வாய்ப்பாட்டு, மத்தளம், நடனம், நாடகம், இசை அமைத்தல், கெஞ்சிரா, வீணை, வயலின் போன்ற துறைகளிலும் நன்கு ஈடுபட்டு வருகின்றனர்; ஈடுபட்டு இசைத்தொண்டு புரிகின்றனர். இங்கு இவரின் நாதசுர தவில் ஆகிய துறை இசைப் பணியே இடம்பெறுகின்றது.

முதலில் இசைவேளாளர் என்ற வழக்கை நோக்கலாம் இது அண்மைக் காலத்திலே ஏற்பட்டது. முன்னர் இவர் இசையாளர் என்றும் அழைக்கப்பட்டனர். பொதுமக்கள் இவரை நட்டுவர், மேளகாரர், நாயினக்காரர் என அழைப்பர். நட்டுவர் என்ற சொல் 16ஆம் நூற்றாண்டிற்குரிய ''வையா பாடல்''

நூலில், 40ஆம் செய்யுளில் வருகின்றது. 1 அதேநூல் நட்டுவ வாத்தியக்காரர் — செய்யுள் 95 — நாட்டியஞ் செய்வோர் — செய்யுள் 60 — பற்றிக் கூறுகின்றது. பிரித்தானியர் ஆட்சியின்போது 1824ஆம் ஆண்டிலே நடத்தப்பெற்ற முதலாவது குடிசன மதிப்பீட்டிலே யாழ்ப்பாண மாவட்டத்தில் 22 நட்டுவர் 2 வாழ்ந்த கணக்குக் கொடுக்கப்பட்டுள்ளது.; ஆனல் ஒல்லாந்த ஆளுனராக இருந்த தோமசுவான்றி (கி. பி. 1697இல்) தம் குறிப்பிலே யாழ்ப்பாணத் தில் நாற்பத்தியொரு சாதிகள் இருந்ததாகக் குறிப் பிட்டுள்ளார். 3 இதில் பிராமணர், தவசி போன் ருேர் இடம்பெறுகின்றனர். நட்டுவர் இடம்பெற வில்லை. போர்த்துக்கேயர் (கி. பி 1505 — 1658) ஒல்லாந்தர் கி. பி. (1658 — 1796) இலங்கையை ஆண்டபோது சைவம் நசுக்கப்பட்டது. யாழ்ப்பா ணத்தைப் போர்த்துக்கேயர் 1616இல் பிடித்தனர். ஆகவே இந்த நட்டுவரின் கோயிற் சேவகத்திற்கு இடமில்லை. இவர்கள் பெரும்பாலும் கமத்தொழிலை யும் வேறு தொழில்களையும் மேற்கொண்டிருக்கலாம். யாழ்ப்பாணத்தில் நாதசுரக் கலைஞர் வாழ்ந்த பகுதி ஒன்று "வங்கியன் சீமா" என அழைக்கப்பட்டது என் பர். இப்பெயர் இப்போது வழக்கொழிந்துவிட்டது. வங்கியம் என்பதன் பொருள் மூங்கில் குழல்; அதா வது குழலையே தொழிலாக் கொண்டவர் வாழ்ந்த இடம்.; ஆனல் இப்போதும் அளவெட்டியில் வாரி சீமா என்ற இடப்பெயர் இருக்கின்றது. வாரி என்ப தன் பொருள் குழல். அளவெட்டியில் கூத்துக் கலை ஞர் வாழ்ந்தபகுதி "கூத்தன் சீமா" என்ற பெய ரைப் பெற்றது என்பர். அண்மைக் காலத்தில் திரு. எம். டி. இராகவன் எழுதிய "ஈழத்துத் தமிழர் பண்பாடு" என்னும் நூலிலே தேவதாசி பற்றிக் குறிப்பிட்டுள்ளார். 4 இசைவேளாளர் பற்றி அவர் ஆராயவில்லை. காட்மன் எழுதிய "ஈழத்து இந்து மதம்" என்னும் நூலிலே நட்டுவர் பற்றிய குறிப்பு

வருகின்றது. 5 ஆனால் விபரமான ஆய்வு இடம் பெறவில்லை. ஆகவே யாழ்ப்பாணத்து இசைவேளாளர் பற்றிய சுருக்கமான ஆய்வு இங்கு இடம்பெறுகின்றது. இப்படியான ஆய்விற்கு "ஈழத்து இசையாளர் மலர்" ஏடு தொடங்கப்பட்டது. இது தொடர்ந்து நடைபெறவில்லை. இதனைப் பதிப்பித்தவர் அகில இலங்கை இசைவேளாளர் சங்கச் செயலாளர் மாவை நாதசுர வித்துவான் எஸ். ஆர். ஞானசுந்தரம். யாழ்ப்பாணத்து இசைவேளாளர் தமிழ் நாட்டிலிருந்து வந்து குடியேறியவர். தமது தாய் நாட்டு மரபுடன் தமக்கெனவும் சில மரபுகளையும் இவர் ஏற்படுத்திக் கொண்டனர். தமிழ்நாட்டு இசை வேளாளர் மரபையும் யாழ்ப்பாணத்து இசை வேளாளர் மரபையும் ஒப்புநோக்கி ஆய்தல் பயனுடைய செயலாகும்.

## நாதசுரமோ? நாககசுரமோ?

"நாதசுரமோ? நாககசுரமோ?" எது சரியான சொல் என்பது பற்றிய ஆய்வு தமிழ் நாட்டிலே நடைபெற்றது. இங்கும் இதுபற்றிய ஆய்வு நடந்தது. நாதசுரத்தைக் குறிக்கும் சொல் பலவுண்டு.

| | | |
|---|---|---|
| நாகசின்னம் | — 1 பக் | 2195 |
| நாதசுரம் | ,, | 2273 |
| நாககசுரம் | ,, | 2195 |
| நாயினம் | ,, | 2213 |
| நாதக்குழல் | ,, | 2214 |
| நாதவாகினி | ,, | 2215 |
| நாயகசுரம் | ,, | 2221 |

சென்னைப் பேரகராதி

இது பற்றித் தமிழ் நாட்டிலே கோதண்ட இராமன் ஆய்வு நிகழ்த்தியுள்ளார். 6 யாழ்ப்பாணத்தில் நாகசின்னம், நாதசுரம், நாகசுரம், நாயினம் ஆகிய சொற்கள் வழக்கிலிருக்கின்றன. நாதசுரம் உருவானது பற்றி யாழ்ப்பாணத்து இசை வேளாளரிடம் செவிவழிவந்த கதை ஒன்று இருக்கின்றது. அதுமேல் வருமாறு :-

" தமிழ் நாட்டிலே நாதநாயனூர் என்ற இசை வல்லார் ஒருவர் இருந்தார். ஆடல்வல்லானைச் சேவிக்கச் சிறப்பான வாத்தியம் ஒன்று தேவை என இவர் நினைத்தார். இப்படியான வாத்தியம் ஒன்றைக் கண்டுபிடிக்க வேண்டுமென இவர் சிலகாலம் நோற்ருர். ஒருநாள் ஆடல்வல்லான் இவருக்குக் கனவிலே தோன்றினூர்". " அஞ்சாதே மைந்தா ! இதோ வாத்தியம், இப்படி வாசி " என வாசித்துக்காட்டி விட்டு மறைந்தார். கானமூர்த்தியாம் ஆடல்வல்லான் மறைந்ததும் நாதநாயனூர் கண்விழித்தெழுந்தார். நாதநாயனூர் ஆடல்வல்லானை வணங்கினூர். தான் கனவிலே கண்ட நாதசுரக் கருவியை இணக்கினூர். இணக்கி ஆடல்வல்லான்முன் வாசித்துக் காட்டினூர்; அங்கிருந்த எல்லோரும் நாதநாயனூரைப் போற்றினர். " நாதமூர்த்திக்குரிய சிறப்பான வாத்தியம் இது.ஆகவே இது நாதசுரம்," என்றனர் ஒருசாரரார். " இந்த வாத்தியத்தைக் கண்டுபிடித்த நாதநாயனூரின் பெயரும் இத்துடன் இணையவேண்டும்; ஆகவே இது நாதனுயனூர் வாத்தியம்," என்றனர் மற்ருெரு சாரரார் "நல்லது, நாதசுரம்; நாதனுயனூர் வாத்தியம். இந்த இரண்டு பெயரும் இருக்கட்டும்," என்றனர் மற்ருெருசாரரார். நாதசுரம் என்ற பெயர் நிலைத்துவிட்டது. நாதநாயனூர் வாத்தியம் என்பது குறுகிநாயினம் ஆனது.

இதேபோன்ற கதையை இராகரத்தினமாகத் திகழ்ந்த திருவாவடுதுறை இராசரத்தினமும் கூறியுள்ளார். இது "தினமணிக்கதிரிலே" வெளிவந்தது. மேலும் கூத்தப்பிரானும் நாயகனுக்குரிய வாத்தியம் இது என்றபடியால் நாயகசுரம் என்ற பெயரைப் பெற்றது எனவும் கூறுவர்.

நாதசுரவாத்தியம் யாழ்ப்பாணத்திற்கு வந்தது பற்றிச் சுவையான கதை ஒன்றுஇங்கு செவிவழியாக வந்துள்ளது. இதனைக்கூறியவர் மாவிட்டபுரம் கந்தசுவாமிகோயில் ஆதீனவித்துவான் தங்க நாதசுரக்காரர் நா. சோ. பக்கிரிசாமி. 7

" மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் ஆதீன இசையாளர் பரம்பரைபற்றிய ஒருகதை உண்டு. முன்னொருகாலத்திலே கலைஞானியார் என்று ஒருவர் இருந்தார். அவர் ஒருநாள் தஞ்சைப் பெரியகோயிலுக்குப் போயிருந்தார். ஆடல்வல்லானை வணங்கிய பின்னர் பொற்காசு பலவற்றையும் காணிக்கையாகச் செலுத்தினார்; ஆனால் பெரும் தவறு ஒன்றையும் செய்தார். கோயிலுக்குச் சொந்தமான நாதசுரம் ஒன்றையும் களவாக எடுத்துத் தன் கைப்பையிலே போட்டுக்கொண்டு ஈழ நாட்டிற்கு வந்துவிட்டார். இசையிலே ஏற்பட்ட பெரும் மதிப்புக் காரணமாகவே அவர் அப்படிச் செய்தார். ஈழத்திற்கு வந்த பின்னர் தன் தவறை நினைந்து உருகினார். ஆடல்வல்லான் அவருக்குக் கனவிலே தோன்றினார் "இசைஞானியாரே ! பயப்பட வேண்டாம். நீர் வாழுகின்றபகுதியில் எமது தமிழ்க் குழந்தை முருகனுக்கு ஓர் ஆலயம் எழும்பப் போகின்றது. அது வரையும் இந்தக் குழலைக் கவனமாக வைத்திருக்கவும். இந்தக் குழல் மூலம் இசைபொழியக்கூடிய பரம்பரையொன்று அந்தக் கோயிலில்

உருவாகும்,'' என்று கூறி மறைந்தார். அந்தப் பரம் பரையிலேதான் நான் பிறந்தேன். இது தான் கதை. ''இசைக்கும் சுருதிக்கும் எவ்வளவு தொடர்பு உண்டோ அவ்வளவு தொடர்பு எமக்கும் வறுமைக் கும் உண்டு. நாம் கோயிலுக்கு எழுதுப்பட்ட இசை யாளர். எமக்குத்தொழில் அப்பனைச் சேவித்தல். அந்தணர் கோயிலில் உள்ளே நின்று மந்திரம் சொல் லித் தீபம் காட்டி முருகனைச் சேவிக்கின்றார். நாம் வெளியே நின்று அப்பனைச் சேவிக்கின்றோம். எம் முச்செல்லாம் முருகனுக்கே'' என்று கூறிப் பக்கிரி சாமி பரவசமடைவார்.

தமிழ் நாட்டிற்கும் ஈழத்திற்கும் உரிய கலைப் பிணைப்பையே மேலே தந்த கதை உணர்த்துகின் றது. தமிழ் நாட்டிலே உள்ள நாதசுர தவில் வித்து வான்கள் ஈழத்திற்கு வந்து சேவிக்காவிட்டால் தமது கலைவாழ்க்கை முழுமையாகாது என்று இன்றும் கருதுவர். அதே போன்று ஈழத்து வித்துவான்கள் தமிழ்நாட்டிற்குச் சென்று சேவகம் செய்யாவிட் டால் தம் கலை வாழ்க்கை நிறைவு பெறுது என எண்ணுவர். நாதசுரம் என்ற சொல்லையே இசைப் பேரறிஞர் பி. எஸ். வீருசாமிப்பிள்ளை கையாண்டுள் ளார். 8 நாதசுரம் தமிழ் நாட்டிற்குரிய கருவி என இசைப் பேரறிஞர் வழுவூர் இராமையாபிள்ளை நிறுவியுள்ளார். 9 அடியாற்கு நல்லார் இதனை வங்கி யம் எனக் குறிப்பிட்டுள்ளார் என இராமையா பிள்ளை சுட்டிக்காட்டியுள்ளார். தமிழ் நாட்டிற் குழல் தொன்று தொட்டு இருந்துவருகிறது. ''யாழ்இனிது குழலினிது'' என்ற குறளை நோக்குக. காற்றுக் கரு வியும், நரம்புக் கருவியும் தமிழ் நாட்டிற்குப் புதி யவை அல்ல. குழலிலிருந்து நாதசுரம் தோன்றியது. தமிழ் நாட்டிலிருந்த ''கொட்டு'' என்பதே நாள டைவில் மேளம் ஆகியது.

தவில் என்ற சொல்பற்றிய கருத்துவேற்றுமை இல்லை. எனினும் பிற்சேர்க்கையில் இதனை ஆராய்ந்துள்ளேன். தமிழ் நாட்டிலுள்ள முரசின் படிமுறை வளர்ச்சியே தவில் எனவும் கொள்ளலாம்.

## ஈழத்து இசைமரபும் வரலாறும்

ஈழத்து இசைப் பாரம்பரியம் மிகவும் விரிவாக ஆராயப்படவேண்டியது; ஆனால் தமிழ் நாட்டிலே கிடைக்கின்ற சான்று போல ஈழத்தில் கிடைப்பதில்லை. இருந்தும் சிலவற்றை இங்கு நோக்கலாம்.

(1) இராவணனின் கதை
(2) நாகர் வரலாறு
(3) ஈழத்து ஈசுவரங்கள்
(4) ஈழத்துச் சோழர் ஆட்சி
(5) யாழ்ப்பாணத்தரசின் காலம்
(6) யாழ்ப்பாடியின் கதை
(7) போர்த்துக்கேயர் ஒல்லாந்தர் காலம்
(8) ஆங்கிலேயர் காலம்
(9) ஈழத்தின் சுதந்திரயுகம்

**இராவணனின் கதை:** இராவணனின் இசைத் திறமை எல்லையற்றது. தன் இசை மூலம் சிவனையே மயக்கியவன்; இசைப்பேரறிஞன். இவனை ஈழத்து அரசன் என ஏற்றுக்கொண்டால், ஈழத்து இசை மரபு இவனுடன் தொடங்குகின்றது எனவும் கொள்ளலாம். நவராத்திரி பூசையின்போது வைக்கப்படுகின்ற வீணையை யாழ்ப்பாணத்து இசையாளர் "இராவணன் வீணை" எனக் கூறுவர்.

**நாகர் வரலாறு:** நாகதீபம் என்ற பெயரையே பண்டைக்காலத்து இலக்கியத்திலே காண்கின்றோம். நாகதீபம் என்பது யாழ்ப்பாணத்தின் பழைய பெயர்

என்பர். 10 ஈழத்தின் வடபகுதியில் நாகமக்கள் வாழ்ந்தனர் என்பர் பேராசிரியர் கணபதிப்பிள்ளை 11 இந்த நாகமக்கள் கையாண்ட வாத்தியமே ' நாக சின்னம் '' என்பர் ஒரு சாரார். மகாவம்சம், சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற நூல்களில் வருகின்ற நாகர் பற்றிய விரிவான ஆராய்ச்சி தேவை.

**ஈழத்து ஈசுவரங்கள் :** ஈழத்தின் பழம்பெரும் ஈசுவரங்கள் நகுலேசுவரம், கோணேசுவரம், திருக் கேதீசுவரம், முன்னேசுவரம் என்பன. இந்தச் சிவன் கோயில்களில் இசைமூலம் ஆடவல்லானைக் சேவிக் கின்ற பரம்பரை ஒன்று தொன்று தொட்டு இருந்து வந்திருக்கின்றது. இதுபற்றி விரிவான ஆராய்ச்சி தேவை. இந்தக் கோயில்களைச் சிங்கள மன்னரும் ஆதரித்து வந்துள்ளனர்.

**ஈழத்தில் சோழர் ஆட்சி :** ஈழத்தில் சோழர் ஆட்சி கி. பி. 993 தொடக்கம் கி. பி. 1070 வரை நடை பெற்றது. இக் காலத்திலே புதிய கோயில்கள் கட்டப் பட்டன. பழைய கோயில்கள் புதுப்பிக்கப்பட்டன. ஈழத்தை ஆண்ட சோழ மன்னரின் தேசாதிபதி '' சோழ இலங்கேசுவரன் '' என்ற பட்டப் பெயர் பெற்றிருந்தான். 12 சோழர் காலத்தில் ஈழத்துச் சைவக் கோயில்கள் உன்னத நிலையில் இருந்தன. பொலநறுவைச் சிவ தேவாலயக் கல்வெட்டு இருக் கின்றது. சோழர் ஆட்சியின் பின்னர் முதலாம் விசயபாகுவின் காலத்திற்குரிய கல்வெட்டு ஒன்றிலே தேவதாசிகள் பற்றிய குறிப்பு வருகின்றது; 13 ஆகவே தேவதாசிகளுக்குரிய குழல், மேளம் போன்ற வாத்திய வல்லுனரும் ஈழத்தில் இருந்தனர்.

**யாழ்ப்பாணத்தரசின் காலம் :** யாழ்ப்பாணத்த ரசின் தொடக்க காலம் சரியாகத்தெரியவில்லை. பண் டைய நாகமன்னரே இவரின் முன்னோடிகள் என்பர். ஈழத்தில் இந்து மதம் மிகப்பழைய காலம் தொடக்கம்

இருந்துவந்தது என்பது தெளிவு. 14 கி. பி. 1619 வரை யாழ்ப்பாணத்தரசு சுதந்திரமாக இருந்து வந்தது. யாழ்ப்பாணத்து நல்லூர் முருகன் ஆலய மிகவும் உன்னதமான நிலேயிலிருந்தது. இது போர்த் துக்கேயரால் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டது. 15 இங்கு அப்பனேக் குழல் வாசித்துக் கொட்டடித்துச் சேவிக்கின்ற மரபு இருந்திருக்கும் என்பதில் ஐயமில்லே.

**போர்த்துக்கேயர் ஒல்லாந்தர் காலம் :** இந்தக் கால கட்டம் போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்தை கி. பி. 1619இல் கைப்பற்றி 1658 வரை ஆண்டு வந்தனர். இவர் தமது மதமாகிய உரோமன் கத்தோலிக்க மதத்தைப் பரப்பினர். கோணேசுவரம். திருக்கேதீச்சரம் போன்ற கோயில்களேயும் இடித்துத் தரை மட்டமாக்கினர். 16 சைவ வழிபாட்டிற்குப் பெரும் தடையை விதித்தனர். இக்காலத்தில் கோயில் சேவகத்திற்கு வாய்ப்பு இல்லே. இங்குள்ள கோயிற் கலேஞர் பலரும் பயிர்ச் செய்கை போன்ற வேறு தொழிலில் ஈடுபட்டனர். மேலும் பலர் தமிழ் நாட்டிற்கு ஓடிச்சென்றுவிட்டனர். ஒல்லாந்தர் காலத்திலும் (1658—1796) சைவம் நலிவுற்றது. எனினும் ஒல்லாந்தர் காலத்தின் இறுதிப் பகுதியில்தான் சைவத்திற்கிருந்த தடை சற்று நெகிழத் தொடங்கியது.

**ஆங்கிலேயர் காலம் :** ஆங்கிலேயர் கி. பி. 1796 தொடக்கம் 1948 வரை ஈழத்தை ஆண்டு வந்தனர். இவர்கள் சைவ வளர்ச்சிக்கு நேரடித் தடையை விதிக்கவில்லே. யாழ்ப்பாணத்தில் மறுமலர்ச்சி ஏற்பட்டது. இதனே மேலும் துரிதப்படுத்தியவர் யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுகநாவலர். (1822—1879) யாழ்ப்பாணத்துக் கோயில் யாவும் திருத்தி அமைக்கப்பட்டன. இங்கு சேவகம் புரிய நாதசுர தவில் கலேஞர் போதிய அளவில் இருக்கவில்லே. ஆகவே

தமிழ்நாட்டிலிருந்து இசைவேளாளர் அழைக்கப்பட்டனர். இப்படி அழைக்கப்பட்ட ஒரு சாரார் திருவிழா பட்சத்தின்போது வருவதும் போவதுமாக இருந்தனர். பலர் இங்கு குடியேறினர். இங்கு வாழ்ந்த இசை வேளாளருடன் மணத் தொடர்பை ஏற்படுத்தினர். இந்த உண்மையையே மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் ஆதினத்தைச் சேர்ந்த பழம் பெரும் வித்துவான்கள் இருவர் கூறுகின்றனர்.

"எமது தந்தையார் தஞ்சாவூரைச் சேர்ந்த திருப்புகலூரைச் சேர்ந்தவர்..........இப்போதையைப் போல அப்போது குடியுரிமைப் பத்திரம் புகைப்படம் தேவையில்லை. நான் முதல்முதலாக யாழ்ப்பாணத்திலிருந்து திருவண்ணுமலைக்குப் பாய்க்கப்பலில் போய்வந்தேன்" என்கிருர். நாதசுரவித்துவான் நா. சோ. உருத்திராபதி. (வயது 81) 17 எமது பரம்பரை பூர்வீகத்தில் திருப்புகலூரைச் சேர்ந்தது," என மாவிட்டபுரம் நாதசுர வித்துவான் இராசா கூறுகிருர். 18 திருப்புகலூர் சிவபுண்ணிய நாதசுரக்காரரும் சின்னச்சாமி நட்டுவனுரும் இற்றைக்கு இருநூறு ஆண்டுகளுக்கு முன்னர் வந்து குடியேறினர் எனத்தெரிகின்றது. 19 தமிழ் நாட்டு ஈழத்து இசை வேளாளரின் தொடர்பு மேலும் வலியுற்றது. வடபகுதித் துறைமுகம் மூலம் பிரயாணிகளை ஏற்றிச் செல்லப்படாது என்ற தடை உத்தரவை ஆங்கிலேயர் விதித்தனர். புகைவண்டி மூலம் தலைமன்னுருக்குச் சென்று தமிழ் நாட்டிற்குப் போகவேண்டுமென்ற பிரயாணவிதி வந்தது. இருந்தும் யாழ்ப்பாணத் தமிழ்நாட்டு இசைவேளாளர் தொடர்பு குறையவில்லை.

**யாழ்ப்பாடியின் வரலாறு:** இசைக் கலையை ஈழத்துமன்னர் நன்கு மதித்து வந்தனர். இதற்கு யாழ்ப்பாடியின் கதையை ஆதாரமாகக் காட்டுவர்;

பிறவிக் குருடனுகிய பாணன் ஒருவன் தன் இசைத் திறனை மன்னன்முன் நிலைநாட்டினுன். மகிழ்வுற்ற மன்னன் பாணனுக்கு யாழ்ப்பாணத்தை பரிசாக வழங்கினுன் என்பர். 20

**ஈழம் சுதந்திரம் பெற்றபின்:** *1948 இல் ஈழம் சுதந்திரம் பெற்றது. கலை இலக்கிய உலகில் மறு மலர்ச்சி ஏற்பட்டது. அத்துடன் ஈழம், இந்தியப் பிரயாணச்சட்டம் படிப்படியாக இறுக்கமானது. இந்தியக் கலைஞர்கள் ஈழம் வருவதற்குத் தற்கால வசிப்பிடப்பத்திரம் பெறவேண்டியிருந்தது. தமிழ் நாட்டுக் கலைஞர் இங்கு பெருமளவிலே வருகை தந்தால் தமது வருமானம் பாதிக்கப்படும் என்று ஈழத்துக் கலைஞர் ஒரு சாரார் அஞ்சினர். சிலர் இந்த அச்சத்தை நேரடி எதிர்ப்பு மூலம் காட்டினர்; ஆகவே தமிழ் நாட்டிலிருந்து நாதசுர, தவில் வித்துவான்களைக் கட்டுவது குறையத் தொடங்கியது. "கட்டுவது" என்பதன் பொருள் சோடிகட்டுவது: இது இசையாளர் வழக்கு.*

*இன்று யாழ்ப்பாணத்தில் இசை வேளாளர் மாவிட்டபுரம், அளவெட்டி, இணுவில் கோண்டாவில் சாவகச்சேரி, கைதடி, பருத்தித்துறை, மூளாய், போன்ற இடங்களில் வசிக்கின்றனர்; இப்பொழுது இவரில் பலருக்கும் முழு நேர வேலை சேவகம். பலர் கல்வி கற்று வேறு தொழில்களையும் புரிகின்றனர். தொடக்கத்தில் இந்த இசையாளர் கமம் செய்து வந்தனர். வலங்கைமான் சண்முகசுந்தரத்தின் தந்தையார் மூளாய் ஆ. வை. ஆறுமுகம் தான் கமம் செய்ததாகக் கூறுகிறுர். 21*

**குருகுலவாசகக் கல்வி:** *யாழ்ப்பாணத்தில் அன்று நிலவிய இசைவேளாளர் குருகுலவாசகக் கல்வியின் அமைப்புப் பற்றி மாவை வித்துவான்கள் நா. சோ. உருத்திராபதி, சு. க. இராசா, மூளாய் ஆ. வை.*

ஆறுமுகம், இணுவில் பெரிய பழனி, இணுவில் விசுவலிங்கம், இணுவில் சின்னத்துரை ஆகியோர் விபரமாகக் கூறியுள்ளனர். அதனையே அடிப்படையாக வைத்து இங்கு ஆராயலாம். நா. சோ. உருத்திராபதி, சு. க. இராசா, ஆ. வை. ஆறுமுகம் கூறியவை அச்சில் வந்துள்ளன.(22)

(அ) ஏட்டுப் படிப்பு — தமிழ்க் கல்வி
(ஆ) வாய்ப்பாட்டு
(இ) சிட்சை தொடக்கம் தாளக்காரர் / ஒத்துக்காரர்
(ஈ) யாழ்ப்பாணத்தில் சிட்சை
(உ) தமிழ் நாட்டில் சிட்சை
(ஊ) நாயினம் / தவில் போடுதல்
(எ) சோடி நாயினம் / சோடித்தவில்
(ஏ) தனித்துச் சேவகஞ் செய்தல்

(அ) **ஏட்டுக் கல்வி :** தமிழ்ப் படிப்பிற்கு யாழ்ப்பாணத்து இசைவேளாளர் முதன்மை கொடுத்தனர். யாழ்ப்பாணத்தில் திண்ணைப் பள்ளிக்கூடம் பலவும் இருந்தன. இசை வேளாளச் சிறுவர் பள்ளியிலே சேர்ந்து தமிழைக் கற்றனர். இவர்களின் பாடத்திட்டத்தில் தேவாரம், திருவாசகம், பெரியபுராணம், கந்தபுராணம், திருப்புகழ் போன்ற சமய நூல்கள் இடம்பெற்றன. மாவிட்டபுரம் நாதசுர வித்துவான் பக்கிரிசாமி புராணத்திற்குப் பயன் சொல்லக்கூடிய அறிவு பெற்றவர். அவர் தன் 76ஆம் வயதிலே 1965இல் காலமானார். இலங்கைப் பல்கலைகழகத்துத் தமிழ்ப் பேராசிரியர் க. கணபதிப்பிள்ளைக்கு 1950இல் ஈழத்து இசைப்பாரம்பரியம் என்பதைப் பற்றி இவர் அருமையான விளக்கம் கொடுத்தார். தனக்கு ஐந்து வயதாக இருக்கும்போது திண்ணைப்பள்ளியில்

தான் தமிழ் கற்றது பற்றி மாவிட்டபுரம் நாதசுர வித்துவான் இராசா கூறியுள்ளார். (23) இவர் தமிழை ஆறு ஆண்டு கற்றவர். "வேலுப்பிள்ளைச் சட்டம்பியாரை எனது முதற் குருவாக இன்னும் போற்றுகிறேன். இவர் சுமார் 80 வயது வரை உயிர் வாழ்ந்தவர். நான் புகழ்பெற்ற வித்துவானுக மாறும் பொழுது என்னைக்கண்டு பூரிப்படைவார். என் கச்சேரிக்கு வந்து கேட்டு மகிழ்ந்து என்னை வாழ்த்து வார். இவர் முன்பாக நான் என்றுமே சால்வை போட்டது கிடையாது. அந்தநாள் குருபத்தி அப்படி" என்று கூறுகின்றூர். இதே கதையைத்தான் தவில் வித்துவான் மூளாய் ஆ வை. ஆறுமுகமும் கூறு கிறூர். (24) "எமது தொழிலுக்கு ஏட்டுப் படிப்பு மிகவும் முக்கியம். இரண்டு கார்ணத்திற்காகக் குறிப்பிட விரும்புகிறேன். ஒன்று இசையை நன்கு கற்று அறிய ஏட்டுப்படிப்பு முக்கியம். இரண்டு நல்ல தமிழ் அறிவு நல்ல குணத்தை பண்பை :உருவாக்கும். எனது ஆரம்பக்கல்வி ஏட்டுப்படிப்புடன் தொடங்கியது. இப்பொழுதுள்ள பொன்னுலை வரதராசப் பெருமாள் ஆலயத்திற்கு அருகாமையில் நாராயணச் சட்டம்பியாரென்று ஒருவர் இருந்தார். அவர் பிள்ளைகளுக்குத் திறம்படப்பாடம் சொல்லிக்கொடுத்து வந்தார். எனக்கு ஐந்து வயதாக இருக்கும் போது ஏடு தொடக்கப்பட்டது. .........இவரிடம் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நிகண்டு, தேவாரம், திருவாசகம் திருப்புகழ், குமரேசர் சதகம் போன்றவற்றை ஆறு ஆண்டுவரை கற்றேன். "தமிழ்க் கல்வியை நன்கு கற்ற காரணத்திஞலேதான் அந்தக் காலத்து வித்துவான்கள் தமிழ்ப்பாடல்களை நன்கு வாசித்தனர். இப்போதும் இந்த மரபு யாழ்ப்பாணத்தில் காக்கப்படுகின்றது. தமிழ்ப்பாடலை "உருப்படி" என்னும் மரபு அந்தக்காலத்தில் இல்லை. இப்போது இந்த வழக்கு இடம்பெறுகிறது.

(ஆ) வாய்ப்பாட்டு: "அந்தக்காலத்தில் நாதசுர வித்துவான்களுக்குரிய ஆரம்பக் கல்வி வாய்ப்பாட்டு. இப்படிச் சொன்னால் இந்தக் காலத்தவருக்கு வியப்பாக இருக்கும். நாதசுர வித்துவான் ஒருவர் பாட்டின் பொருளையும் உணர்ச்சியையும் நன்கு விளங்கிக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு எழுத்தையும் சொல்லையும் சுத்தமாக விழுங்காமல் சிதைக்காமல் உச்சரிக்கப் பழகவேண்டும். வாய்ப்பாட்டுமூலம் சிறந்த ஞானத்தைப்பெறுவது முக்கியம். இதற்காகச் சுமார் நான்கு ஆண்டுகள் வாய்ப்பாட்டைப் படித்தேன்...... மேடையில் வாய்ப்பாட்டுக் கச்சேரி செய்யக்கூடிய ஞானம் பெற்றேன்" எனக் கூறுகிறார் இராசா. 25 இதே கருத்தையே நாதசுரவித்துவான் பக்கிரிசாமியும் கொண்டிருந்தார். பக்கிரிசாமி பற்றி நாதசுர வித்துவானின் தம்பியார் நா. சோ. உருத்திராபதி கூறுபவை இங்கு கவனிக்கவேண்டியவை. 26 "தேவாரம், திருவாசகம், திருப்புகழ், நந்தன் கீர்த்தனை, எட்டிக்குடி ஏசல் போன்றவை எல்லாம் இவரின் வாத்தியத்திலிருந்து பாகாகக் கரைந்து ஓடும். நல்லாக வாய்ப்பாட்டைச் சொல்லிக்கொடுப்பார். பாட்டிலே ஒரு எழுத்தையும் விழுங்கமாட்டார். உச்சரிப்புத் தெளிவு வேண்டும், பொருள் உணர்ந்து பாட வேண்டும் என்பதில் மிகவும் கண்டிப்பானவர்."

தவில் வித்துவானாக விரும்புவோரும் மரபையொட்டித் தமிழையும் வாய்ப்பாட்டையும் கற்றனர் என்பது மூளாய் ஆ. வை. ஆறுமுகம் கூறியவற்றிலிருந்து தெரிகிறது.

**வாத்திய சிட்சை:**

"எனக்கு நாதசுரநாட்பாடம் தொடங்குவதற்காக மிகச் சிறப்பாக அன்று ஒழுங்குகள் நடந்தன. (சரசுவதி பூசை) எமது உறவினர் எல்லோரும் அழைப்பின் பேரில் வந்திருந்தனர். எனக்குத் தரவேண்டிய வாத்

தியம் சிங்காரிக்கப்பட்டுப் பூசையில் இருந்தது. பூசை முடிந்ததும் என் தமையனார் குழந்தைவேல் ஆசீர் வாதம் பண்ணி நாயினத்தை எடுத்துத்தந்தார். நானும் நிலத்தில் விழுந்து வணங்கிய பின்னர் வாத்தியத்தை வாங்கி ஒழுங்கின்படி வாசித்தேன். அன்று தொடக்கம் இந்தத் தெய்வக் கருவி என் மூச்சிலிருந்து ஒலித்துக்கொண்டிருக்கிறது. இந்தக் கட்டையை நான் விடும்வரையும் அப்படியே ஒலிக்க வேண்டும்......என் சிறுவயதிலிருந்தே நான் தாளக்காரனாகப் போயிருக்கிறேன். இது முக்கியமான படிப்பு...... எனது நாட்பாடத்தின் பின்னர் என் தமையனாரின் கண்டிப்பான மேற்பார்வையில் ஒழுங்காகச் சாதகஞ் செய்துவந்தேன். கேள்வி ஞானம் வளருவதற்காகத் தமையனார் என்னைத் தன் கச்சேரிகளுக்கு ஒழுங்காக அழைத்துச் செல்வார்.'' என நாதசுர வித்துவான் இராசா கூறியுள்ளார் 27. ''என் மூத்த தமையனார் பக்கிரிசாமிப்பிள்ளை. அவரின் பெயரை நான் சொல்வது மிகக் குறைவு. அவர் தான் என் முதற் குரு'' என நாதசுர வித்துவான் உருத்திராபதி கூறுகின்றார் 28.

''இப்படி எனக்கு ஏட்டுக்கல்வி நடந்துகொண்டிருக்கும்போது எனக்கு இசைக்கல்வி, நாட்பாடம் பத்தாவது வயதிலே ஆரம்பமாகியது. என் பெரியப்பாக்களைப் பார்த்ததினாலோ என்னவோ தெரியாது எனக்கு நாதசுரத்தின்மேல் ஆசை பிறந்தது. தொடக்கத்திலே நாதசுரம் படித்தேன். எனது முதற்குரு சபாபதி நாயினக்காரரின் மகன் முத்துசாமி நாயினக்காரர். இவர் எனது மாமனார். எனது தமையனார் சீதாராமன் சிறந்த தவில் வித்துவான். இவர் தஞ்சை மாவட்டத்திலுள்ள தண்டலைச் சேரியி ஆதீனத்தில் சேவித்து வந்தார்........ தாளக்காரனாகப் போய் என் கேள்வி ஞானத்தை வளர்த்தேன்-...... எனக்கு வாய்ப்பாட்டைச் சொல்லிக்கொடுப்பார்.'' இப்படித் தவில் வித்துவான் ஆறுமுகம் கூறியுள்ளார் 29.

**(இ) யாழ்ப்பாணத்தில் சிட்சை:** இசை வேளாள ரின் சிட்சை முறையாக யாழ்ப்பாணத்தில் நடை பெறும். அந்தக் காலத்து வித்துவான் ஒவ்வொருவ ரிடத்திலும் தனித்தனித் திறமை இருக்கும். ஆகவே சீடப்பிள்ளை ஒருவர் வித்துவான் பலரிடமும் தமது சிட்சையைப் பெறுவர். யாழ்ப்பாணத்து வித்துவான் கள் எல்லோரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர் என்ற உணர்வு இருக்கும். பெரிய வித்துவான்கள் சீடப்பிள்ளைகளை உளம் உவந்து ஏற்பர். இன்னும் சில வித்துவான்கள் தமது அரங்கேற்றத்தை முடித் துக்கொண்டு பழம்பெரும் வித்துவான்களுடன் சோடி நாயினம் அல்லது சோடித்தவிலாகப் போய்ச்சேர்ந்து தம் வித்தையை வளர்ப்பர். இதனால் இந்தச் சோடிக் காரருக்கு ஒரே நேரத்தில் வித்தையும் பணமும் கிடைத்தன. அந்தக் காலத்தில் மாவிட்டபுரம் உருத் திராபதி மாவிட்டபுரம் நடராசா, சாவகச்சேரி சண்முகசுந்தரம் மாவிட்டபுரம் அப்புலிங்கம் சோடி யாக இருந்து நாதசுர வித்தையை வளர்த்தனர். இந்தக் காலத்தில் அளவெட்டி நாதசுர வித்துவான் என். கே. பத்மநாதனுடன் சோடியாக இருந்து வாசித்துப் புகழ்பெற்றவர்கள் அளவெட்டி எம். பி. பாலகிருஷ்ணன், அளவெட்டி எஸ். சிதம்பரநாதன் அளவெட்டி இ. கேதீஸ்வரன். தவில் வித்துவான் எம். என். காமாட்சிசுந்தரத்துடன் சேர்ந்து வாசித் துப் புகழ்பெற்றவர் இணுவில் பி. எஸ். இராசகோ பால், அளவெட்டி வி. தெட்சணாமூர்த்தி. எடுத்துக் காட்டாக மட்டும் சில பெயர்கள் இங்கு தரப் பட்டன.

**தமிழ் நாட்டில் சிட்சை:**

தமிழ் நாட்டிற்குச் சென்று தமது வித்தையை வளர்த்தவர் பலர். இதுபற்றி விரிவான ஆராய்ச்சி தேவை. ''யாழ்ப்பாணத்து நல்லூர் முருகையா

பிள்ளை, யாழ்ப்பாணம் அப்புலிங்கம்பிள்ளை முதலியோர் கண்ணப்பபிள்ளையின் புகழ்பெற்ற சீடர்,'' இப்படித் தஞ்சை பி. என். சுந்தரம் ''நாதசுர மேதைகள் கீரனூர் சகோதரர்கள்'' என்ற கட்டுரையிலே குறிப்பிடுகிறார். 30 யாழ்ப்பாணத்திலிருந்து தமிழ்நாட்டிற்குச் சென்று சிட்சைபெற்றவர் பலர். * சிலரின் விபரம் :-

---

* யாழ்ப்பாணத்து இசைவேளாளர் யார் யார் பற்றிய விரிவான ஆராய்ச்சி தேவை. அவர்கள் வாழ்கின்ற கிராமத்து வரலாறு விரிவாக எழுதப்படல் வேண்டும். இந்த முயற்சிக்குப் பலரின் ஆதரவும் தேவை. இதேபோன்ற ஆராய்ச்சி கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, மலையகம் ஆகிய இடங்களிலும் மேற்கொள்ளப்படல் வேண்டும் என்பதை இங்கு சுட்டிக்காட்ட நான் கடமைப்பட்டுள்ளேன். இதனை அரசமட்டத்தில் செய்வது பெரிதும் விரும்பத்தக்கது.

Donated by
The Family of
Prof. A. SATHASIVAM
Dept. of Tamil
University of Peradeniya

## நாதசுரம்

| பெயர் | யாழ்ப்பாணத்தில் சிட்சை | தமிழ்நாட்டில் சிட்சை |
|---|---|---|
| **மறைந்த பரம்பரை** | | |
| மாவை எஸ். சோமாசுக்கந்தர் | — | அம்பல் முருகேசு |
| மாவை நா. சோ. பக்கிரிசாமி | மாவை சோமாசுக்கந்தர் (ஒன்றுவிட்ட தமையன்) | அம்பல் முருகேசு |
| மாவை சு. க. குழந்தைவேல் | மாவை சோமாசுக்கந்தர் (உறவினர்) | தஞ்சாவூர் சக்கரபாணி |
| மாவை நா. சோ. நடராசா | மாவை நா. சோ. உருத்திராபதி (தமையன்) | கொத்தமங்கலம் தண்டபாணி |
| மாவை நா. சோ. உருத்திராபதி | மாவை நா. சோ. பக்கிரிசாமி (தமையன்) | சிதம்பரம் வைத்தியநாதன் கொத்தமங்கலம் தண்டபாணி |
| மாவை எஸ். எஸ். அப்புலிங்கம் | மாவை எஸ். சோமாசுக்கந்தர் (தந்தை) | கீரனூர் கண்ணப்பர் |
| **பழம் தலைமுறை (வாழ்பவர்)** | | |
| மாவை சு. க. இராசா | மாவை சு. க. குழந்தைவேல் (தமையன்) | சிதம்பரம் கோவிந்தசாமி |

| பெயர் | யாழ்ப்பாணத்தில் சிட்சை | தமிழ்நாட்டில் சிட்சை |
|---|---|---|
| **இப்போதைய தலைமுறை** | | |
| அளவெட்டி என். கே. பத்மநாதன் | என். கந்தசாமி (தந்தை) | சீர்காழி திருநாவுக்கரசு |
| மாவை எம். எஸ். சண்முகநாதன் | மாவை சு. க. இரசா (மாமன்) | குளிக்கரை பிச்சையப்பா |
| அளவெட்டி செ. சிதம்பரநாதன் | மாவிட்டபுரம் சு. க. இராசா | ஆண்டாள் கோயில் செல்வரத்தினம் |
| அளவெட்டி இ. கேதீசுவரன் | மாவிட்டபுரம் சு. க. இராசா | பந்தனை நல்லூர் தெட்சணாமூர்த்தி |

## தவில்

| | | |
|---|---|---|
| **மறைந்தவர்கள்** | | |
| மூளாய் ஆ. வை. ஆறுமுகம் | நா. முத்துசாமி (மாமன்)<br>ஆ. வை. சீதாராமன் (தமையன்) | — |
| வண்ணார்பண்ணை எம். என். காமாட்சிசுந்தரம் | எம். என். சின்னத்துரை (தமையன்) | — |

| பெயர் | யாழ்ப்பாணத்தில் சிட்சை | தமிழ்நாட்டில் சிட்சை |
| --- | --- | --- |
| அளவெட்டி வி. தட்சணாமூர்த்தி | இணுவில் விசுவலிங்கம் (தகப்பன்)<br>வண்ணார்பண்ணை காமாட்சிசுந்தரம் | நாச்சியார் கோயில் இராகவன் |
| **வாழ்பவர்கள்** | | |
| சோ. ப. குமாரசுந்தரம் | மாவிட்டபுரம் பக்கிரிசாமி (தந்தை) | நாச்சியார் கோயில் இராகவன் |
| இணுவில் இராசகோபால் | இணுவில் எம். எல். சின்னத்துரை | — |
| அளவெட்டி நா. குமரகுரு | அளவெட்டி நாகலிங்கம் (தந்தை)<br>மூளாய் ஆ. வை. ஆறுமுகம் | வலங்கைமான் சண்முகசுந்தரம் |
| இணுவில் சின்னராசா | இணுவில் பி. எஸ். சின்னத்துரை | திருமுல்லைவாசல் முத்துவீர் |
| வடலியடைப்பு ஜெயராமன் | மூளாய் ஆ. வை. ஆறுமுகம் | — |

மேலும் ஈழத்து வித்துவான்களிடம் பாடம் கேட்பதற்காகத் தமிழ்நாட்டிலிருந்து பலரும் வந்தனர். மாவிட்டபுரம் சோமசுக்கந்தர், மாவிட்டபுரம் பக்கிரிசாமி, அளவெட்டி தர்பார் கந்தையா போன்றவர்களிடம் தமிழ் நாட்டிலிருந்து இளைஞர் நாதசுரச் சிட்சைக்காக வந்தனர்; தவில் கற்பதற்காக இணுவில் பெரியபழனி, இணுவில் சின்னத்துரை, மூளாய் ஆ. வை. ஆறுமுகம் ஆகியோரிடம் தமிழ்நாட்டு இளைஞர் வந்தனர். அப்போது இலங்கை இந்தியப் பிரயாணத்திற்குத் தடை இல்லை. அத்துடன் யாழ்ப்பாணத்து வாழ்க்கை வளமுடையதாக இருந்தது. சிட்சைக்கு வருகின்ற பிள்ளைகளுக்கு இலவச உணவு, உடை வழங்கப்படும். அவர்கள் தாளக்காரராக அல்லது ஒத்துக்காரராகப் பணிபுரிவதற்குச் சன்மானமும் வழங்கப் பெற்றது. ஆகவே தமிழ் நாட்டு இளைஞர் இங்கு வருவதும் போவதுமாக இருந்தனர். ஈழத்து வித்துவான்கள் பலர் தாம் வெளி நாட்டிற்குச் சிட்சைக்குப் போகத் தேவை இல்லை எனவும் சொல்லிப் பெருமையடைவர்.

**நாதசுரம் தவில் போடல் :**

அந்தக் காலத்தில் நாதசுரம் தவில் போடல் பெருவிழாவாக அமையும். "போடல்" என்றால் அரங்கேற்றம் என்பது பொருள். இப்போதும் "கூத்துப் போடல்" என்ற வழக்கு நிலவுகின்றது. அரங்கேற்றம் வித்துவானின் குலதெய்வத்தின் கோயில் மூலமூர்த்தியின் முன்பாக நடைபெறும். அக் குலதெய்வத்தின் காலடியில் விசேட பூசைக்காக வாத்தியம் வைக்கப்படும். பூசை முடிந்ததும் வாத்தியத்தை எடுத்து இளம் வித்துவானின் கையிலே கொடுப்பார் குருக்கள். வித்துவான் குருக்களையும், தன் குருவையும் வணங்கிய பின்னர் வாசிக்கத் தொடங்குவர்; குருவும் வித்துவானுடன் சேர்ந்து

வாசிப்பது மரபு. இதுபற்றிய விரைமான குறிப்பை மாவிட்டபுரம் இராசா கூறியுள்ளார். 31. இப்படியான அரங்கேற்ற மரபு இப்போது மறைகிறது எனலாம்.

சேவக மரபு:

கோயில்களில் இசைப்பணி புரிவதை இன்றும் யாழ்ப்பாணத்து வித்துவான்கள் "சேவகம்" என்பர். கலைகளின் நோக்கம் கடவுளைச் சேவித்தல். தமிழன் கண்ட மரபு, இசைமூலம் அப்பனைச் சேவிக்கின்றமை, தூய்மையாள பணி. வேறு வாத்தியங்களை விடுத்துத் தான் நாதசுரத்தைதத் தொட்டது. கடவுளுக்குப் பணிசெய்யவும், மக்கள் இசைஞானத்தைப் பெருக்கவும் என மதுரை பொன்னுச்சாமி (கி. பி. 1877 — 1929) வீணை தனம்மாளுக்குக் கூறினார். 32 இந்தக் கூற்றைத் தழுவி இன்றும் சேவகஞ் செய்வர் யாழ்ப்பாணத்து வித்துவான்கள், "இராகத்தை எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் விரிவாகவும், விளக்கமாகவும் வாசித்து எல்லோரையும் பரவசப்படுத்தும் இயல்பு இந்த நாதசுரத்துக்கு அமைந்திருப்பதுபோல வேறு எந்த இசைக் கருவிக்கும் அமையவில்லை என்பது என்கருத்து. இது, உத்தம கருவிகளில் சிறந்ததாக இருப்பது பற்றியே தேவாலயங்களில் இன்றியமையாதமொரு அங்கமாக நம் முன்னையோர் இக்கருவியை உபயோகித்து வந்தனர்" எனத் தண்டபாணி தேசிகர் கூறுகின்றார். 33 இக்கருத்தை ஆதரித்தும் இன்றும் யாழ்ப்பாணத்து வித்துவான் பலரும் பேசுவர்.

நாதசுரமும் தவிலும் கோயிலை மையமாகவைத்து வளர்ந்த மங்கல வாத்தியம்; ஆனால் வீட்டைக் கோயிலாக்கி நடத்துகின்ற சிறப்பான வைபவங்களிலும் நாதசுரம் இசைக்கப்படும். ஒரே ஒரு அமங்கல

வைபவத்தில் மட்டும் இது இசைக்கப்படும். அதாவது கல்லெடுப்பு அல்லது அந்தியேட்டியில் நாதசுரம் இசைக்கப்படும். பிரிந்த உயிர் இறைவனை அடைவதற்கே கல்லெடுப்பு நடைபெறும்; ஆகவே இதுவும் சமயச் சடங்கு. கல்லெடுப்பிற்கு நாதசுரம் இசைக்கப்படுவது இப்போது பெரும்பாலும் வழக்கிலில்லை;

கோயில் நித்திய நைமித்திய பூசைகளில் நாதசுர இசை முக்கியமான இடம் பெறும். யாழ்ப்பாணத்திலே ஒரு காலப் பூசை தொடக்கம் ஆறுகாலப் பூசைகள் நடக்கின்ற கோயில்கள் இருக்கின்றன. பெரிய கோயில்களில் நித்திய மேளச்சேவை இடம் பெறும். கிராமியக் கோயில்களில் பொங்கல், மடை, குளிர்ச்சி, கஞ்சிவார்த்தல் போன்ற வைபவங்களில் நாதசுரம் ஒலிக்கப்படுவதில்லை. மிருகபலியின்போது இசைத்தால் வாத்தியத்தின் தெய்வத்தன்மை கெட்டுப்போகும் என்பது யாழ்ப்பாணத்து இசை வேளாளரின் நம்பிக்கை; வேள்வியின்போது பறை ஒலிக்கப்படும். காவடிக்குரிய சிறப்பான வாத்தியம் நாதசுரம் தவில். ''காவடி மேளம் கலகலத்துப் பேசும்'' என்பது யாழ்ப்பாணத்து வழக்கு. கரகம் காவடிக்கு இங்கு நையாண்டி மேளம் வாசிக்கும் வழக்கு இல்லை எனலாம். இவ்வாட்டங்களுக்கு உடுக்கு, மிருதங்கம், கெஞ்சிரா போன்றவை வாசிக்கப்படுகின்றன.

ஒருவருடைய வாழ்க்கையில் பிறப்புத் தொடக் இறப்புவரையும் நாதசுரம் வாசிக்கப்படுகின்றது என்பர். குழந்தை பிறந்து தொட்டிலிடுதல், காதுகுத்துதல், ஏடு தொடக்குதல், பூணூல் போடுதல், பெண்ணுக்குப் பூப்பு நீராட்டுதல், புதுமனை புகுதல், திருமணவிழா அறுபதாம் ஆண்டுவிழா, அந்தியேட்டி என்பவற்றில் நாதசுரம் இடம்பெறும்.

இனிக் கோயில்களில் திருமணவிழாவில் இன்ன நேரம், இன்னஇசை பொழிய வேண்டும் என்ற மரபை நோக்கலாம். இந்த மரபு இப்போதும் யாழ்ப் பாணத்தில் இருக்கின்றது.

| பூசை | இராகம் |
|---|---|
| உசாக்காலம் | பூபாளம், பிலகரி |
| காலசந்தி | தன்யாசி, சுத்தசாவேரி |
| உச்சிக்காலம் | மத்தியமாவதி, சிறீராகம் |
| சாயரட்சை | கல்யாணி, சங்கராபரணம் |
| இரண்டாம் காலம் | பைரவி, தோடி |
| அர்த்தசாமம் | சக்கரவாகம் (தவில் இல்லை) |
| மூலமூர்த்தியின் பூசை | அரிகாம்பூதியில் திருத்தாண்டகம் (தவில் இல்லை) |
| சுவாமி உள்வீதி வரல்<br>தேரில் இருந்து இறங்குதல்<br>சூரன்போர்<br>வேட்டைத் திருவிழா | மல்லாரி |

மரபுகள் மாறுவதைப் பெரியவர்கள் பொறுக்க மாட்டார் எனவும், முறைமாறி வாசித்தால் அப்படி வாசிப்பவரின் காதைப் பிடுங்கி எடுத்துப்போடுவார் எனவும் தவில் வித்துவான் ஆறுமுகம் கூறியுள் ளார். 34 இந்தக் காலத்தில் மரபுகள் மாறுகின்றன. திருப்புகழுக்குப் பதிலாக வேறு வடிவங்கள் இடம் பெறுகின்றன. கோயில் சேவகங்களுக்கு அந்தக் காலத்தில் மேடை அமைப்பதில்லை. வீதியில் நின்று வாசிப்பர். அல்லது தரையில் விரிப்பைப் போட்டு விட்டு இருந்து வாசிப்பர். எம்பெருமான் வலம் வரும்போது உயர்ந்த இருக்கையில் இருக்கப்படாது என்பது அக்கால நம்பிக்கை; மரபு. மேலும் யாழ்ப் பாணத்தில் அந்தக்காலத்தில் பல்லவியை விரித்து வாசிப்பர். இந்தக் காலத்திலும் யாழ்ப்பாணத்தில்

பல்லவிக்குத் தனி இடம் உண்டு. தேவாரம், திருவாசகம், திருப்புகழ், ஊஞ்சற்பாட்டு, எட்டிக்குடி ஏசல், தமிழ்ப்பாடல்கள் ஆகியவைக்கு யாழ்ப்பாண இசை அரங்கில் முக்கியமான இடமுண்டு. தமிழ்ப் பாடல்களையே யாழ்ப்பாணத்து இரசிகர்கள் பெரும்பாலும் விரும்புவர்.

**இசை வேளாளரின் உயர்ந்த தரம்:**

இசை வேளாளரின் கலை அறிவு மிகவும் உயர்வாக இருப்பதற்குரிய காரணங்களை இனி நோக்கலாம். முதலாவதாகக் காலம் மாறினாலும் இவர்கள் இன்றும் குருகுலவாசகக் கல்வியையே பெரிதும் விரும்பிப் பின்பற்றுகின்றனர். இரண்டாவதாக இக் குலத்தவர் பலரும் இசையையே தொழிலாகக் கொண்டுள்ளனர். இதனால் இவரின் இசைத் திறமை வளருகின்றது. மூன்றாவதாக நாதசுர இசைக்கு யாழ்ப்பாணத்தில் பெரும் ஆதரவு இருக்கின்றது. திறப்பு விழாக்கள், தலைவர்களை அழைத்தல், ஊர்வலம் போன்றவற்றிலும் வாசிக்கும் வழக்கம் இப்போது இடம்பெறுகின்றது. திருமண விழா திருவிழாப் பட்சம் என்று ஆண்டு முழுவதும் வாத்தியப் பயிற்சி வாய்ப்பு இவர்களுக்கு உண்டு. நான்காவதாக இசை வேளாளர் பலரும் இசைமூலம் கணிசமான சன்மானம் பெறுவர்; ஆனால் முதுமையில் இவர்களுக்குப் போதிய பாதுகாப்பு இல்லை. இருந்தும் இசையைத் தொழிலாகக் கொண்டு வாழும் வாய்ப்பு இவர்களுக்கு இருக்கின்றது. ஐந்தாவதாகப் பொதுமக்களின் ஆதரவு இவர்களுக்கு நிறைய உண்டு. இதைத் தவிரப் பாராட்டுவிழா, பட்டமளிப்பு, பொன்னாடை போர்த்தல், பொற்கிழி வழங்கல் போன்றவற்றை ஏற்படுத்தி இரசிகர்கள் இவர்களை ஊக்கப் படுத்துவர். ஆறாவதாகத் தமிழ்நாட்டு வித்துவான் பலரும் இங்கு வந்து காலத்துக்குக்காலம் தங்கி சேவகம் செய்வர். இவர்களுடன் சேர்ந்து வாசிப்பதால் யாழ்ப்பாணத்து வித்துவான்களின் தரம் மேலும் உயர்ந்தது. இங்கு மூன்று மாதங்களுக்குமேல் தங்கியிருந்த வித்துவான்களில் சிலரின் விபரம்:-

| நாதசுரம் | தவில் |
| --- | --- |
| திருவாவடுதுறை இராசரத்தினம் | இராமேசுவரம் சேதுராசா |
| திருவெண்காடு சுப்பிரமணியம் | கும்பகோணம் தங்கவேல் |
| வேதாரணியம் வேதமூர்த்தி | திருமுல்லைவாசல் முத்துவீர் |
| இராசபாளையம் செல்லையா | திருமங்கலம் சுந்தரேசன் |
| கோட்டூர் இராசரத்தினம் | மன்னார் குடிநடேசன் |
| திருவாலூர் இராசரத்தினம் | திருச்செங்கோட்டான்குடி உருத்திராபதி |
| அம்பல் இராமச்சந்திரன் | |
| கோயிற்பட்டி இராசையா | தரித்தனூர் நாராயணசாமி |
| சேரன்மாதேவி குருசாமி | திருவளந்தூர் இராமதாசு |
| திருநெல்வேலி சண்முகக்குட்டி | காரைக்கால் சோமசுந்தரம் |
| கம்பர் | வலையப்பட்டி சுப்பிரமணியம் |

மேலும் நாச்சியார் கோவில் இராகவன், காருக்குறிச்சி அருணாசலம் போன்றவர்களும் இங்கு வந்து காலத்துக்குக்காலம் சேவகஞ் செய்துள்ளனர். ஏழாவதாக யாழ்ப்பாணத்து வித்துவான் பலரும் நாதசுரம், தவிலுடன் நின்றுவிடாமல் வேறு கலையையும் பயின்று இசை நிகழ்ச்சியை நடத்தினர். இதனால் இவரின் இசைப்புலமை மேலும் வளர்ந்தது. எடுத்துக்காட்டாகச் சிலரின் பெயரை மட்டும் இங்கு நோக்கலாம்.

| | |
|---|---|
| நாதசுர வித்துவான் நா. சோ. உருத்திராபதி | புல்லாங்குழல், வாய்ப்பாட்டு, வயலின், வீணை, தவில் |
| நாதசுர வித்துவான் எஸ். சோமாசுக்கந்தர் | வீணை, முகவீணை, வாய்ப்பாட்டு |
| நாதசுர வித்துவான் பி. எஸ். ஆறுமுகம் | முகவீணை, வாய்ப்பாட்டு |
| நாதசுர வித்துவான் எம். எஸ். சண்முகநாதன் | புல்லாங்குழல் |
| நாதசுர வித்துவான் எஸ். எஸ். அப்புலிங்கம் | முகவீணை, வாய்ப்பாட்டு |
| தவில் வித்துவான் எம். என். சின்னத்துரை | கெஞ்சிரா, மிருதங்கம் |
| தவில் வித்துவான் வண்ணை எம். என். காமாட்சிசுந்தரம் | கெஞ்சிரா, மிருதங்கம் |
| தவில் வித்துவான் மூளாய் ஆ. வை. ஆறுமுகம் | மிருதங்கம், நாதசுரம், வாய்ப்பாட்டு |
| தவில் வித்துவான் அளவெட்டி நாகலிங்கம் | நாதசுரம், மிருதங்கம் |
| தவில் வித்துவான் இணுவில் புண்ணியமூர்த்தி | கெஞ்சிரா |

இந்த வழமை இப்போது மாறுகிறது. " ஒரு வித்துவான் ஒரு வாத்தியம் " என்பது தான் ஏறக் குறைய இப்போதைய நிலை. எட்டாவதாக யாழ்ப் பாணத்தில் கலைஞருக்குள் ஒற்றுமை நிலவுகின்றது. ஒருவருக்கு ஒருவர் உதவும் வகையில் இருக்கின்றனர். ஒரே குடும்பம் என்ற உணர்வுடன் வாழ்கின்றனர். இதனால் நல்ல சுமுகமான போட்டிநிலை நிலவுகின் றது. ஒன்பதாவதாக இசைவேளாளர் குடும்பத்தில் இளைஞர் பலரும் கற்றுத் தேறிப் பல்வேறு தொழில் புரிகின்றனர். பலர் இசையாசிரியர்களாகவும் இருக் கின்றனர். இருந்தும் கணிசமானவர் தங்கள் தொழி லைச் செய்து வாழலாம் என்ற நம்பிக்கையுடன் இருக் கின்றனர். பத்தாவதாக இலங்கை ஒலிபரப்புக் கூட் டுத்தாபனம் இக் கலைஞருக்குப் போதிய வாய்ப்பைக் கொடுத்துவந்துள்ளது. இங்கு " சீவாளி இசை ", " பூணூல் " இசை என்ற போட்டியில்லை. ஒலிபரப் புத்துறையில் நாதசுர இசைக்கு மேலும் நேரம் ஒதுக் கப்படல் வேண்டும் என இசைவேளாளர் சங்கச் செயலாளர் திரு. எஸ். ஆர். ஞானசுந்தரம் கேட் டுள்ளார். பதினொன்றாவது யாழ்ப்பாணத்து நாதசுர தவில் வித்துவான்களுக்குப் பொதுமக்களிடம் நிறைய ஆதரவு இருக்கின்றது. நாதசுரக் கச்சேரி புறம்பாக வும், தவில் கச்சேரி புறம்பாகவும் நடத்துவதால் இசைப்பிரியர் இன்பம் காண்பர். தவில் கச்சேரிக ளுக்கு நாதசுர வித்துவான்களின் ஆதரவு நிறைய உண்டு. நாதசுர வித்துவான்கள் மேடையிலிருந்து தவில் கச்சேரிகளை நடத்தி வைப்பர். இதனால் நாத சுர தவில் வித்துவான்கள் தம் திறமையைக் காட்ட நிறைய வாய்ப்பு உண்டு 35. தமிழ் நாட்டு நாதசுர வித்துவான் ஒருவர் இங்கு கூறியவை கவனிக்கப்பட வேண்டியவை. " எனது சீவாளி நனைந்து போகும். அது காயும்வரை தான் தவிலுக்கு இடம் கொடுப் பேன். அதற்குமேல் இல்லை. " என்றார்.

யாழ்ப்பாணம் மிகவும் குறுகிய நிலப்பரப்பு உடையது. இங்கு வாழும் இசை வேளாளரின் தொகையோ குறைவு. இருந்தும் இக் குலத்தவரின் கலைத்தொண்டு மிகவும் பெரியது.

**கலைஞரைக் கௌரவித்தல் :**

கலைஞரைக் கௌரவித்தலில் பொதுமக்கள் காட்டும் ஆர்வம் இம்மட்டன்று. இந்த ஆர்வம் தொடர்ந்து வளர்கின்றது. அந்தக் காலத்தில் நாதசுர வித்துவான்களுக்கு வெள்ளி, தங்க நாதசுரமும் வழங்கி மக்கள் கௌரவிப்பர். தவில் வித்துவான்களுக்கு தங்கம், வெள்ளித் தவில் கம்புகளும் சிங்கமுகச் சீலையும் வழங்கிக் கௌரவிப்பர். இப்போது தங்கப் பதக்கம் வழங்கல், பொன்னுடை போர்த்தல், பட்டம் வழங்கல், பாராட்டு விழா எடுத்தல், ஆதீன வித்துவான் என்ற விருது வழங்கல் போன்றவை இடம்பெறும். கடைசியாகத் தங்க நாயினம் பெற்ற பெருமை மாவிட்டபுரம் நா. சோ. உருத்திராபதிக்கே உரியது. இது 1939-ல் இடம்பெற்றது, இது பற்றி அவர் கூறியவை :

"என் வாழ்விலே மறக்க முடியாத நிகழ்ச்சி மாவை ஆதீனத்தில் தங்கநாயினம் [போட்டதுதான் நானா போட்டேன்? முருகன் தான் போடுவித்தான்; தங்கத்தாலே நாயினம் ஒன்று எனக்கு அன்பளிப்புச் செய்தனர். அன்பர்களும் ஆதரவாளர்களும் சூழ அதனைத் திருவிழா நாளன்று முருகன் பாதார விந்தங்களில் வைத்துப் பூசையாக்கி வழங்கினர். எனக்கு இரத்தினக் குருக்கள். அன்று கச்சேரி செய்தேன். ஆனந்தக் கண்ணீர் என்னை நிலைகுலையச் செய்தது" 36.

இணுவில் விசுவலிங்கத்திற்குத் தவில் திறமைக்காகச் சிங்கமுகச் சீலை வழங்கப்பட்டதெனத் தெரிகின்றது. இந்தச் சீலை இப்போதும் இவரின் குடும்

பத்தவராலே விலை மதிக்க முடியாத சொத்தாகக் கருதிப் பாதுகாக்கப்படுகின்றது. இந்தத் தவில் வித்துவான் விசுவலிங்கம்தான் காலஞ்சென்ற தவில் வித்துவான் தெட்சணாமூர்த்தியின் தந்தை என்பது குறிப்பிடத்தக்கது.

**வாத்தியம் இணைக்குதல் :**

நாதசுர வாத்தியம் இணக்குதல் அல்லது செய்தல் மிகவும் நுணுக்கமான கலை. இந்த வேலையைச் செய்யக்கூடிய கலைஞர் யாழ்ப்பாணத்தில் இருந்ததாகத் தெரியவில்லை. நாதசுர வாத்தியம் தமிழ் நாட்டிலிருந்தே தருவிக்கப்படுகின்றது. நாத சுரத்தின் அளவு - அதாவது பாரி, திமிரி என்பது தமிழ்நாட்டிலேயே தீர்மானிக்கப்பட்ட அலுவல். அதனையே ஈழத்து வித்துவான்களும் பின்பற்றுகின்றனர். தவில் செய்யக்கூடிய சிறந்த பலாமரம் இங்கு கிடைக்கும்; ஆசாரிமாரும் இருக்கின்றனர். மாவிட்டபுரம் தேர்ச் செல்லப்பா, திருநெல்வேலி சிற்பாசாரியார் ஆறுமுகம் போன்றவர்கள் அந்தக் காலத்தில் இருந்தனர். இப்பொழுது பலரும் இருக்கின்றனர். தவில் பெரும்பாலும் பலா மரத்திலிருந்தே செய்யப்படும். புற நடையாகப் பூவரசும் உபயோகிக்கப்படும் உரல் இடித்தல் ஓசை, போக்குவரத்து வாகனங்களிலிருந்து எழும்ஓசை போன்றவற்றால் தாக்குண்டு நாதமுறுக்கேறிய பலாமரம் சிறந்தது என்பது ஆசாரிமாரின் கருத்து. இப்படி நாதமுறுக்கேறிய தவில் கணீரெனப் பேசும் என்பர்.

**முடிவுரை :**

தமிழ் நாட்டைப்போல இங்கும் நாதசுர தவில் பாடசாலை ஒன்று நிறுவப்படல் வேண்டும் என்ற கருத்து ஒரு சாராரிடம் நிலவுகின்றது. நாதசுர வித்துவான் பலரையும் உருவாக்கிய நாதசுர வித்துவான் சு. க. இராசா இக் கருத்தை ஆதரிக்கின்றார் 37.

இதற்காக ஒரு பாடசாலை சில ஆண்டுகளுக்கு முன்னர் மாவிட்டபுரத்தில் தொடங்கப்பட்டது. இதற்குரிய நிதிவசதியில்லாதபடியால் இப் பாடசாலை தத்தளிக்கின்றது. மற்றும் ஒரு சாரார் பாடசாலை அமைப்பதை எதிர்க்கின்றனர். குருகுல வாசக் கல்வியே சிறந்ததென்பது இவரின் கருத்து. எது எவ்வாறுயிருப்பினும் இசை வேளாளரின் கலைக்கு யாழ்ப்பாணத்தில் நல்ல எதிர்காலம் இருக்கின்றது தமிழ் நாட்டிலே தஞ்சாவூர்ப்பாணி ஓங்கி நிற்பதுபோல ஈழத்தில் யாழ்ப்பாணப் பாணியே ஓங்கி நிற்கின்றது.

## பிற்சேர்க்கை

மணவீடுகளில் வாசிக்கும் மரபு பின்னர் ஆராயப்படும்.

**தவில்:** இது உருது மொழியில் இருந்து வந்ததென்பர். சென்னைப் பேரகராதி பக். 1795. இதே சொல்லைக் குறிப்பது வடமொழியிலிருந்துவந்த சொல் மேளம் - அதே அகராதி பக். 3361.

**கொட்டு:** இதுவும் மேளத்தைக் குறிப்பது.

> ''கொட்டடித்துக் குழல்ஊதி
> நட்டுவனார் நல்வாழ்த்து வழங்க''
>
> —மக்கள் பாட்டு

**நாகர் காலம்:** அண்மைக் காலத்தில் 'யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டையில் கண்டு பிடிக்கப்பட்ட எலும்புக்கூடு, முத்திரை மிகப் பழமை வாய்ந்தவை. யாழ்ப்பாணத்துத் தொல்குடி மக்கள் திராவிடர் என்பதை இவை வலியுறுத்தும் என்பர்.

**யாழ்ப்பாணத்தில் தவில்:** யாழ்ப்பாணத்தில் தவிலுக்குப் பெரும் மதிப்பு மக்களிடம் உண்டு. இக் கருத்தை வலையப்பட்டி ஆ. சுப்பிரமணியம் கூறியுள்ளார். அது வருமாறு:-

" 59 இல் நாதசுர வித்துவான் யாழ்ப்பாணம் இராமமூர்த்தியுடன் மூன்று மாதங்களுக்கு நான் சிலோன் சென்றிருந்தேன். அங்கு தவிலுக்கு முக்கியத்துவம் கொடுத்தார்கள். இரண்டு மூன்று மணி நேரத்திற்குத் தனித் தவில் வாசிக்க வைத்தார்கள். தொழிலில் முன்னேற அது எனக்கு ஒரு அருமையான சந்தர்ப்பமாக அமைந்தது."

ஆனந்தவிகடன் பக். 23, 18-1-81

★ ★ ★


1. வையாபாடல் -பதிப்பு கலாநிதி க. செ. நடராசா
2. *Return of the population of the Island of Ceylon (1824) Page 137.*
3. *Memoirs of the Dutch Governor to his Successors- Van Rhee.*
4. *Tamil Culture in Ceylon - M. D. Ragavan.*
5. *Hinduism in Ceylon - Rev. Cartman.*
6. தமிழ் இசைக் கருவிகள் - பி. கோதண்டராமன் பக். 46.
7. இசையும் மரபும் - பக். 11, த. சண்முகசுந்தரம்
8. வழிபாட்டு இசை நாதசுர சம்பிரதாயம் பக். 49 - தமிழ் இசைச்சங்க மலர் - இல. 19 வீருசாமிப்பிள்ளை.
9. அதே - பக். 43.
10. *Mahavamsa* - முகப்புப் படம் *Ed. Geigr.*
11. " சங்கிலி நாடகம் " முன்னுரை - க. கணபதிப் பிள்ளை.
12. கந்தளாயில் கண்டுபிடிக்கப்பட்ட சோழ இலங்கேசுவரர் காலத்துக் கல்வெட்டு - பக். 1, பகுதி II, துரையப்பாபிள்ளை நூற்றாண்டு மலர் - கா. இந்திரபாலா.


Donated by
The Family of
Prof. A. SATHASIVAM
Dept. of Tamil

13. *Epigraphia Zeylancia vol. VI - Page* 195.
14. *South Indian Inscripions - Pagc* 490.
கலாநிதி செ. குணசிங்கம் - பக். 11 துரையப்பா பிள்ளைமலர்.
15. *The Spiritual and Temporad Conquest of Ceylon Page* 642. *Vol. VI. Rev. Fr. Queyroz. ED. Rev. Fr. Perera.*
16. அதே நூல்
17. கலையும் மரபும் - பக். 7 த. சண்முகசுந்தரம்
18. இசையும் மரபும் - பக். 7 த. சண்முகசுந்தரம்
19. ஈழத்து இசையாளர் மலர் - பக். 10 'யாழ்தேவி'
20. யாழ்ப்பாண வைபவமாலை - பக். 23 குல. சபாநாதன் பதிப்பு
21. இசையும் மரபும் பக். 26
22. "கலையும் மரபும்" "இசையும் மரபும்" நோக்குக.
23. இசையும் மரபும் - பக். 09
24. அதே பக். 26
25. இசையும் மரபும் - பக். 08
26. கலையும் மரபும் - பக். 04
27. இசையும் மரபும் - பக். 10
28. கலையும் மரபும் - பக். 03
29. இசையும் மரபும் - பக். 25, 27
30. தமிழ் இசைச் சங்க மலர் - பக். 61 (31ம் ஆண்டு)
31. இசையும் மரபும் - பக். 11
32. "தமிழ் இசைக் கட்டுரைகள்" பக். 53 இசைப் பேரறிஞர் தண்டபாணிதேசிகர்
33. அதே பக். 13
34. இசையும் மரபும் - பக். 28
35. பிற்சேர்க்கை இந்த நூல்
36. கலையும் மரபும் - பக். 8
37. இசையும் மரபும் - பக். 13

Srikanthaluxumy. A
11/21, Inuvil West
Chunnakam

Donated by
The Family of
Prof. A. SATHASIVAM
Dept. of Tamil
University of Peradeniya

## இந்த நூலாசிரியரின் ஏனைய நூல்

வரலாற்று நாடகம்

- வாழ்வு பெற்ற வல்லி
  - இலங்கை சாகித்திய மண்டலப் பரிசுபெற்றது
- பூதத்தம்பி
- இறுதி மூச்சு

கலை

- கலையும் மரபும்
- இசையும் மரபும்

Srikanthaluxumy. A
11/21, Inuvil West
Chunnakam

நாவல்

- மீனாட்சி

மறுமலர்ச்சிப் பாதையில் மக்கள் கலை

- மாநதப்புரவல்லி கப்பற் பாட்டு
- இறக்கணிய வளை குருநாதர் மான்மியம்
- நாய்ச்சிமார் மான்மியம்
- மாவை முருகன் காவடிப் பாட்டு

வாழ்க்கை வரலாறு

- கலையருவி கணபதிப்பிள்ளை
  - இலங்கை சாகித்திய மண்டலப் பரிசுபெற்றது

குகன் அச்சகம் - தெல்லிப்பழை